
உ
சிவமயம்

# சைவ சித்தாந்த விளக்கம்



மு. திருஞானசம்பந்தபிள்ளை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவ சித்தாந்த விளக்கம்

[ அருணந்தி சிவாசாரியர் நினைவுப் பேருரை ]

பொதுசன நூலகம்
30 JUL 2008
யாழ்ப்பாணம்

ஆசிரியர்:

சித்தாந்தமணி, சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்,

**மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள்**

அதிபர், யா. இணுவில் மத்திய கல்லூரி.

கௌரவ அதிபர், மெய்கண்டதேவர் ஆதீனச்

சைவசித்தாந்த உயர் நிறுவனம்,

யாழ்ப்பாணம்.

சைவ சித்தாந்த வெளியீட்டகம்,

யாழ்ப்பாணம்.

1993

4813(P) PC

பதிப்பாளர்: பொ. கேதாரநாதன், B. Sc., Dip. in Ed.
கொத்தணி அதிபர்,
சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா
வித்தியாலயம், வேலணை.
கௌரவ முதல்வர்,
சைவசித்தாந்த வெளியீட்டகம், யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

யாழ்ப்பாணம் மெய்கண்டதேவர் ஆதீனம்

# வாழ்த்து

திருவளருந் திருக்கைலாச ஞானந் தந்த
திருஞான சம்பந்த மெய்கண் டாரின்
குருவளஞ்சேர் குருகாஞ்சி ஞானப்பிர காசர்
குணதருமம் குவலயத்தில் குலாவி வாழ
உருவளரும் உபதேசம் செய்யும் வள்ளல்
உள்ளொளியை உலகரெலாம் உணர்த்துஞ் செல்வன்
பெருமைமிகு திருஞான சம்பந்த பிள்ளை
பேராசான் பெருநலம்நாம் பெற்று வாழ்வாம்.

மெய்கண்டதேவர் ஆதீனம்,
5, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம்.

**க. கணபதிப்பிள்ளை**
குருசேவை செய் முதல்வர்

# சைவசித்தாந்த வெளியீட்டகம்

சைவசித்தாந்தம் திருக்கைலாய ஞானபரம்பரை வழி வந்தது. அது தமிழர்தம் அருஞ்சொத்து. அதனை வளர்த்தெடுத்ததில் பெரும்பங்கு நம்நாட்டவர்க்கு உண்டு. அதனை நிலைநாட்டும் பணியினை மெய்கண்டதேவர் ஆதீனச் சைவ சித்தாந்த உயர் நிறுவனம் மிகுந்த சிறப்புடன் செய்துவருகின்றது. அதன் கௌரவ அதிபராகப் பயன்கருதாது மிகச் சிறப்புடன் செய்து வருகின்றவர் நூலாசிரியர். அன்னாரின் சைவசித்தாந்த ஞான விளக்கம் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் இனிதாக எளியதாக சைவசித்தாந்த சிவமறை ஞானத்தினை அளித்து வருகின்றது.

சைவசித்தாந்தம் எளிதில் விளங்கவில்லையே, அது பல நாள் கற்கவேண்டிய ஒன்றாக இருக்கின்றதே, சுருக்கமாக ஒரு நூலைத் தருக என அன்பர்கள் பலர் பலதடவை கேட்டுக்கொண்டதற்கிணங்க நூலாசிரியர் கருத்துக்களை வெளியிடு செய்யும் நிறுவனமாகச் சைவசித்தாந்த வெளியீட்டகம் மெய்கண்டதேவர் ஆதீனச் செயல் முதல்வர் "சிவ அடியார்க்கு அடியவன்" வேண்டுகோளின் வண்ணம் நிறுவப்பெற்றுள்ளது.

இதன் உறுப்பினர்கள் உயர்நிறுவன எழில்ஞான பூசையிற் பங்குபற்றும் அன்பர்கள். கௌரவ முதல்வர் சைவத் திருமிகு பொ. கேதாரநாதன் அவர்கள்.

---

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

கல்லா ரிழல்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே.

# சைவசித்தாந்த விளக்கம்

உறுதிப்பயன்

இவ்வுலகத்திலே தோன்றியுள்ள மக்கள் அனைவரும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கினையும் அன்றி, ஒவ்வொன்றையேனும் விரும்பி அடைவதில் பெரு விருப்பம் உடையவர்களாய் இருப்பர். இவற்றை அடையத்தம்மாலான முயற்சிகளை மேற்கொள்வர். இடையூறு ஏற்படும் போது இடையிலே முயற்சி கைகூடாது போகவும் காண்பர்.

மேலே கூறப்பட்ட உறுதிப்பொருள்கள் நான்கினுள் முதல் இறுதி என்பவற்றை நீக்கி இடையிலே காணப்படும் பொருள் இன்பம் என்பவற்றை அடைய விரும்புகிறவர்களே பலராவர். சிலர் முதற்கண் உள்ளதாகிய அறத்தினையும் மேற் கொள்ள முயலுவர். அவ்வறமும் மிக நீண்ட தன்மையுடையதனால் அவ்வழியில் செல்வோர் சிலர் ஆவது அதிசயமன்று. எல்லாவற்றிற்கும் மேலாக இறுதிக்கண் உளதாகிய வீட்டினை விரும்புவோர் அரிதாக உளரே.

இந்நால்வகை உறுதிப் பொருள்களுள் அறம் இம்மை மறுமைப் பயன்களைத் தருவதாகவும், வீட்டிற்குச் சாதனமாகவும் விளங்குகின்றது. பொருள் இன்பம் ஆகிய இரண்டும் இம்மையிலேயே பயன் தருகின்றன. இம் மூன்றிற்கும் மேலாக வீடு என்னும் பேராவியற்கைப் பெரும்பேறு உயிர்களுக்குப் பிறப்பு இறப்புத் துன்பத்தை நீக்கி என்றும் ஒரு படித்தாய நிலையினைத் தருவதாக உள்ளது.

எனவே மெய்யுணர்வுடையார் இதனையே அடைய விரும்புவர். இதற்குரிய சாதனங்களைப் பெற முயற்சி செய்வர் என்பது வெளிப்படை.

## சமயநெறி

இத்தகைய சாதனங்கள் தத்தம் சமயநூல் உணர்ச்சியும், அச்சமயநூல் நெறி உணர்ந்த வழி, அவ்வழி ஒழுகுதலுமாகும். திருவள்ளுவரும் இதனாலேயே.

> கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக.

என்று கூறியருளினார். நமக்குரிய சமயம் யாது? அச்சமயத்துள் கூறப்படும் பொருள்கள் எவை? அப்பொருள்களைத் தெற்றெனத் தெளிவாக விளக்கும் நூல்கள் எவை? என்றின்னோரன்ன வினாக்களுக்கு விடைகாண ஆராய்வர்.

## சைவசமயம்

உயர்ந்த மெய்ஞ்ஞானிகளால் தெளிந்து நிச்சயிக்கப்பெற்ற பரம்பொருளாகிய சிவபெருமானை வழிபாடு செய்யும் நமக்கு உரிய சமயம் சைவசமயம் என்பதும், அச்சைவசமயத்திலே தெளியப்பட்ட பொருள்கள் அநாதியாகவே விளங்கும் பதி, பசு, பாசம் என்பதும் இவற்றை ஐயந்திரிபு இன்றி விளக்கும் நூல்கள் வேத சிவாகமங்களும் அவற்றின் வழிப்போந்த வடமொழியிலும் தென்மொழியிலும் உள்ள அருள்நூல்களுமாம் என்பதும் மெய்யுணர்ந்த பெரியோர்களால் நன்கு தெளியப்பட்டனவாகும்.

## சைவசமய நூல்கள்

வடமொழிக்கண் விளங்கும் வேதங்களைப் பொதுநூல் என்றும் சிவாகமங்களைச் சிறப்பு நூல் என்றும் கூறுவர். "வேதமொடாகமம் மெய்யாம் இறைவனூல் "என்ற வாக்கியம் இவ்விடம் சிந்தித்தற்குரியது. வேதங்களிற் பிற தேவர்களுக்குக் கூறப்படும் தலைமை உபசாரமென்றும் சிவபெருமானுக்குக் கூறப்படுந் தலைமையே உண்மை என்பதும் உணரப்படவேண்டியதொன்றாகும்.

தமிழ்மொழிக்கண் சைவசமய உண்மைகளை உணர்த்தும் நூல்கள் திருமுறைகள் பன்னிரண்டும், சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கும் அவற்றின் வழித்தாகிய ஏனைய அருளாளர்களால் அருளப்பட்டனவுமாம்.

## தோத்திரமும் சாத்திரமும்

சமயகுரவர் நால்வர் அருளியவை சிவ பரத்துவத்தைக் கூறுவன. அவை தோத்திரவடிவில் அமைந்தன. வேதசாரமாக விளங்குவன.

அவற்றினை எத்தகையநிலையிலுள்ளாரும் தத்தமது நிலைக்கேற்றவாறு பத்திபண்ணித் தோத்திரம் செய்ய உதவுவன. பத்திவழிப்பட்டவர்க்கு முத்திநிலையைக் கொடுக்க வல்லன. சித்தாந்தசாத்திரங்கள் பதினான்கும் ஆகமசாரமாக விளங்குவன. முப்பொருள்களைத் தெளிவுறுத்துஞ் சைவசாத்திர நூல்களுள் திருவெண்ணெய்நல்லூர்த் தோன்றிய மெய்கண்டதேவர் அருளிய சிவஞானபோதம் தலைசிறந்த முதனூல் ஆகும்.

## சிவஞான போதமும் வழிநூலும்

அச்சிவஞானபோதம் பன்னிரு சூத்திரங்களையும், வார்த்திகப் பொழிப்புரைகளையும் கொண்டு விளங்குவது, அரிதின் விளங்கக் கூடியது. அத்தகைய உயர் தனித் தமிழ்ச் சிவஞான போதத்தை எல்லோர்க்கும் இனிது விளங்க இசைப் பாக்களால் விரித்துச் சிவஞான சித்தியார் என்னும் வழி நூலைச் செய்தருளினார் மெய்கண்டார் மாணாக்கராகிய அருணந்தி சிவாச்சாரியார்,

## 2

## அருணந்தி சிவம் வரலாறு

அருணந்தி சிவாச்சாரியார் தென் தமிழ் நாட்டில் நடுநாட்டிலே திருத்துறையூர் என்னுமிடத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் மாமனார் புத்தூர் சடங்கவி சிவாச்சாரியாருடைய இருபத்தொன்றாவது பரம்பரையில் இற்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன் சாலிவாகன சகாப்தம் 1175 ல் தோன்றினார்.

இளமையிலேயே கற்கவேண்டிய கருவி நூல்களைக் கற்றார். மரபுக் கேற்றபடி மந்திர உபதேசமும் பெற்றுக் கொண்டார். வேதங்களையும் வேத அங்கங்களாகிய கற்பம், சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், சந்தோவிசித்தி என்பவற்றையும் கற்று சிறப்பு நூலாகிய ஆகமங்களையும் நன்கு கற்றுத் தெளிந்தார், இவர் சகல ஆகமங்களையும் கற்று அவற்றின் விளக்கங்களை விரிவாகக் கூறுவதால் கற்றறிந்த பெரியோர் இவருக்குச் சகலாகம பண்டிதர் எனுஞ் சிறப்புப் பெயரைச் சூட்டி அழைத்தனர். அதுவே பிரசித்தி பெற்றது.

இவர் ஆகமங்களையும் உடன் கொண்டு பல இடங்களுக்கும் சென்று சமயவாது மூலம் சமய விளக்கம் செய்து மாணாக்கர்களை ஏற்படுத்தி வந்தார். அவ்வாறான மாணவருள் ஒருவர் திருப்பெண்ணாகடத்தைச் சேர்ந்த அச்சுதகளப்பாளர் ஆவர்.

இவர் மகப் பேறின்மை கருதி தம் குருவிடம் சென்று அருள்வழி காட்டுமாறு வேண்டினார்.

குருவருள்' துணை கொண்டு திருஞானசம்பந்தப் பெருமான் தேவாரத்தில் கயிறு சாத்திப் பார்த்தபோது ''பேயடையா பிரிவெய்தும்'' என்னும் பாடல் தோன்றியது. அப்பாடலின் உட்பொருளைத் தெளிந்து திருவெண்காட்டிற்குச் சென்று மனைவியுடன் இறைவனை வணங்கி வருவாராயினார்.

அச்சுதகளப்பாளர் மனைவியார் கருவுற்று ஓர் ஆண் குழந்தையைப் பெற்றார். குழந்தைக்கு ''சுவேதவனப் பெருமான்'' எனப் பெயர் சூட்டி வளர்த்தனர். குழந்தையை நன் மாமனார் திருவெண்ணெய் நல்லூரில் கொண்டு சென்று வளர்த்தார். கருவிலே திருவுடையதாக வளர்ந்த குழந்தை பரிபக்குவமடைந்து இருந்த நிலையை வடபால் இருந்து 'தென்பால் எழுந்தருளிய பரஞ்சோதி முனிவர் உணர்ந்து தீட்சை செய்து ஞானத்தை உபதேசித்து ''மெய்கண்டார்'' எனும் தீட்சா நாமத்தை சூட்டிச் சென்றார்.

மெய்கண்டார் தாம் பெற்ற சிவஞானத்தை ''சிவஞானபோதம்'' எனும் நூலாகச் செய்து மாணாக்கர்களுக்கு உபதேசம் செய்து வந்தார்.

இவரின் பெருமையைக் கேள்வியுற்ற சகலாகம பண்டிதர் திருவெண்ணெய் நல்லூருக்கு வந்தார். மெய்கண்டார் பாடஞ் சொல்லும் இடம் சென்று அவர் அருள் வழிப்பட்டு நின்றார். இவரின் பக்குவ நிலையை உணர்ந்து மெய்கண்டார் சகலாகம பண்டிதரைத் தம் முதன் மாணக்கராக ஏற்று தாம் அருளிய சிவஞான போதத்தை ஐயந் திரிபற உணர்த்தியருளினார்.

மெய்கண்டார் தமக்குச் செய்த பெரு நன்றியை அருணந்தி சிவாச்சாரியார் சிவஞானபோதத்துக்கு வழி நூலாகத் தாம் இயற்றிய சிவஞானசித்தியார் பாயிரத்தில் மிக அழகு பெறக் குறிப்பிடுகின்றார்.

''என்னை இப்பவத் திற்சேரா வகையெடுத்தென் சித்தத்தே
தன்னை வைத்தருளினாலே தாளிணை தலைமேற்சூட்டு
மின்னமர் பொழில்சூழ்வெண்ணெய் மேவி வாழ்மெய்கண்டானூல்
சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்கலுற்றாம்

அருணந்தி சிவாச்சாரியார் தாம்பெற்ற சிவஞானத்தைப் பல மாணவர்க்கும் உபதேசித்தார். அவர்களுள் முதன்மையானவர் மறைஞானசம்பந்தர் ஆவர். சிவஞானசித்தியார், இருபாவிருபஃது என்னும் இரு நூல்களையும் அருளிய அருணந்தி சிவாச்சாரியார் திருத்துறையூரில் சிவானந்த நிட்டை கூடி புரட்டாதி மாதப் பூர நட்சத்திரத்தில் முத்தியடைந்தார்.

3

## சிவஞானசித்தியார் நூல்

புறச்சந்தான குரவருள் இரண்டாவதாக விளங்கும் அருணந்தி சிவம் இயற்றிய சிவஞானசித்தியார் புறச்சமயங்களின் நிலை இதுவென அளவிட்டுக் காட்டும் பரபக்கம் எனவும சித்தாந்த சைவநிலை இது வெனக்காட்டும் சுபக்கம் எனவும் இரு பகுதிகளையுடையது.

### உண்மைச்சமயம்

சைவசித்தாந்த உண்மைகளைக் கூறலந்த அருணந்தி, சித்தியார் சுபக்கத்தில் இறைவனைப் பற்றிக்கூறும் போது

''நிறுத்துவதோர் குணமில்லான்'' என்றும் இருபா விருபஃதில்

''ஓடிமீன்கென ஆடல் பார்த்திட்டு'' என்றும் கூறுகின்ற உண் மையை நாம் உய்த்துணர வேண்டும்

உலகில் சமயங்கள் பலவாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு சமயமும் தத்தம் கொள்கைகளை விளக்குகின்றன. அவ்வாறு விளக் கும் போது தம்முள் ஒன்றோடொன்று மாறுபடுகின்றன. உண்மை இதுவெனத் தெரியாது மக்கள் மயங்குகின்றனர். அத்தகையோருக்கு உண்மைச் சமயம் இது எனக் காண வழிகாட்டுகின்றது சித்தியார்

ஓதுசமயங்கள் பொருள் உணரும்நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாதுசமயம் பொருள் நூல் யாதிங்கென்னின்
இதுவாகும் அதுவல்லதெனும் பிணக்கதின்றி
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தேகாண
நின்றதியாதொரு சமயம் அது சமயம் பொருள்நூல்
ஆதலினால் இவையெல்லாம் அருமறையாகமத்தே
அடங்கியிடும் அவையிரண்டு மரனடிக் கீழடங்கும்.

உண்மைச் சமயம் எந்தச்சமயத்தையும் நிறுத்துவதில்லை, ஒன் றோடொன்று மாறுபடுகின்ற சமயங்கள் எல்லாம் இருப்பது நீதியே என்பது உண்மைச் சமயத்தின் கொள்கை. காணப்படும் சமயக் கொள் கைகளில் எல்லாம் ஓடி உணர்ந்து இறுதியில் உண்மைச் சமயம் பால் மீன்கென ஆடல் பார்த்திருப்பது அதன் இயல்பு, அதேசமயத்தில் அச்சமயங்களில் ஒன்றுடனுஞ் சேராததாய் அவற்றின் வேறதாய் அவை எல்லாம் தன்பால் அடங்கக்கூடியதாயும் இருப்பதுவே உண்மைச் சமயம்.

''இப்பரிசாஞ்சமயமுமாய் அல்லவாகி'' – தாயுமானார் மாறுபடுஞ் சமயம் அனைத்தும் இருப்பது நீதி என்பது வேறு எல்லாச் சமயமும் சமம் என்று சர்வமத சமரசம் பேசுவது வேறு. இருவேறுபாடும் ஒன்றற்கொன்று வெகுதூரம் ஆகும்.

பொன்மலையை அடைய விரும்புகிறவன் அதனை அடையப் புறப்பட்டு - வழிப்பட்டு இறுதியில் கடலில் வீழ்ந்தது போலாகும் நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைந்து செல்லல்.

''கத்திடு மான்மாக்களுரைக் கட்டிற்பட்டோர்
கனகவரை குறித்துப் போய்க் கடற்கேவீழ்வர்'' – சித்தியார்

# 4

## சித்தியார் பரபக்கம்

சிவஞானபோத அவையடக்கத்தின் ஒரு பாட்டினையே சிவஞான சித்தியார் பரபக்கமாக விரித்துக் கூறுகின்றது. சிவஞானபோத அவையடக்கச் செய்யுள் வருமாறு

தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மையுடைமை யெமையிகழார் – தம்மை
உணராரு ணராருடங் கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

பரபக்கத்துள் புறப்புறச் சமயங்களையும், புறச்சமயங்களையுமே ஆசிரியர் ஆராய்ச்சிக்கு எடுத்துள்ளார். அவையாவும் வைதிகப் பிரமாணத்தை ஒப்புக் கொள்ளாமையால் புறச்சமயங்கள் எனப்பட்டன. வைதிகச்சார்பில்லாத சமயங்களைப் புறப்புறச் சமயங்களென்றும் வைதிகச் சார்புடைய சமயங்களைப் புறச்சமயங்களென்றும் பிரித்துக் கூறுகின்றார்.

புறப்புறச் சமயங்களுள் உலகாயதரும்; சௌந்திராந்திகர், யோகசாரர், மாத்திமிகர், வைபாடிகர் ஆகிய நால்வகைப் பௌத்தரும், நிகண்டவாதி, ஆசீவகன் என்ற இருவகைச் சமணரும் அடங்குவர்.

புறச்சமயத்துள் பட்டாசாரியன்மதம், பிரபாகரன் மதம் என்னும் இருவகை மீமாஞ்சகமதமும், சத்தப்பிரமவாதம் கிரீடப்பிரம வாதம், பாற்கரியவாதம், மாயாவாதம் ஆகிய ஏகான்மவாதமும், சாங்கியமதமும் பாஞ்சராத்திரமதமும் அடங்கும்

மேலே கூறப்பட்ட புறப்புறச் சமயங்களினதும் புறச்சமயங்களினதும் கொள்கைகளை ஒவ்வொன்றாகக் கூறி அவற்றின் மறுத்தலையும் கூறிச் செல்கின்றது பரபக்கம்.

சிவஞானசித்தியார் பரபக்கம் 301 செய்யுள்களைக் கொண்டுள்ளது. முதற்பாடல் காப்புச் செய்யுள் இதுவே சுபக்கத்திற்கும் காப்புச் செய்யுளாகவும் கொள்ளப்படுகின்றது.

ஒரு கோட்டனிரு செவியன் மும்மதத்த
னால் வாயைங் கரத்தனாறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
றருமொரு வாரணத் தின்றாள்கள்
ளுருகோட்டன் பொடும் வணங்கியோவாதே
திரவு பகலுணர்வோர் சிந்தைத்
திருகோட்டுமயன்றிருமால் செல்வமுமொன்
றோவென்னச் செய்யுந்தேவே (காப்புச் செய்யுள்)

இதனைத் தொடர்ந்து சிவபெருமான், சக்தி, விநாயகக்கடவுள், சுப்பிரமணியக் கடவுள், மெய்கண்டதேவ நாயனார் என்போருக்கு துதிப் பாடல்கள் சொல்லப்பட்டுள்ளன.

தங்குருவாகிய மெய்கண்டாரைத் துதிக்கும் செய்யுள் நயந்து நயந்து பாராட்டத்தக்கது. கற்பனை வளமும், சிவமணமும் கமழப் பாடியுள்ளார். அத்துடன் சித்தாந்த முடிபினையும் சிறப்பாக உய்த்துணர வைத்துள்ளார்.

பண்டைமறை வண்டரற்றப்பசுந் தேன்ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்ட இருதய கமல முகைகளெல்லாங்
கண்திறப்பக் காசினிமேல் வந்த வருட்கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவு
மெய்கண்டதேவன் மிகு சைவநாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்

துதிப்பாடல்களுக்குப் பின்பு அவையடக்கங்கூறி நூற்சிறப்பையும், நூற்கதிகாரியும், நூல் வழியும், நூற்பெயரும் நூற்கருத்தும் கூறப்படுகின்றன.

மூவகைமக்கள்.

மக்களுள் ஞானம் மிகுந்தோர் சாமுசித்தர் எனப்படுவர். பேதமை மிகுந்தோர் பிராகிருதர் எனப்படுவர். முதல் சொல்லப்பட்டவர்களுக்கு நூல் சொல்ல வேண்டியதில்லை. ஏனெனில் அவர்கள் ஞான வழியிலேயே செல்பவராதலால். இரண்டாவது வகையினோர்க்கும் நூல் சொல்லத் தேவையில்லை. ஏனெனில் அவர் தம் பேதைமையினாலே சொல்லும் பொருள், வழி விளங்கிப் பயன் அடைய

மாட்டார். இவ்விருவகையையுந் தவிர்த்து செல்லும் நெறியை அறிய விரும்பி, சொல்லப்படும் நெறிப்பால் செல்லக்கூடியவராகிய சத்திநிபாதராகிய – அருள்வழிப்பட்ட வைநாயிகர் என்பவரே நூல் கேட்கத் தக்கவராவர்.

சீகண்டபரமேஸ்வரன், நந்திபெருமான், சனற்குமாரன், மெய்கண்டான் வழியாக அருணந்தி பெற்ற ஞானம் முறையே சிவஞான சித்தி எனும் பெயரால் செய்யப்படுகின்றது என நூல்வழி கூறும் பாடல் விளக்குகின்றது.

போத மிகுத்தோர் தொகுத்த பேதைமைக்கே
பொருந்தினோரி வர்க்கன்றிக் கதிப்பாற்செல்ல
ஏது நெறியெனு மவர்கட்கறிய முன்னா
ளிறை வனருணந்தி தனக்கியம்ப நந்தி
கோதிலருட்சனற் குமாரற்குக் கூறக்
குவலயத்தின் அவ்வழியெங் குருநாதன் கொண்டு
தீதகல வெமக்களித்த ஞானநூலைத்
தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தியென்றே.

பரபக்க நூல் சொல்வதன் கருத்து உலகாயதன் முதல் பாஞ்சராத்திரி ஈறாகவுள்ள சமயிகளுடைய பலதுறைகளையுங் வினாவினாலும் விடையினாலும் சொல்லி நீக்கிக் குற்றந்தீர ஞானபாதத்தை அறிய நூல் சொல்லப்பட்டது என்பதாகும்.

பரபக்கத்திலே கூறப்படுகின்ற சமயத்தாருள் உலகாயதர், நால்வகைப் பௌத்தர், ஆருகதர் ஆகிய அறுவகையினரும் வேதம், சிவாகமம் இரண்டினையும் நிந்திக்கும் நாத்திகராயினும் ஒரு நூலென்றும் பிரமாணம் என்றும் கொண்டு ஒரு நெறிக்கண் நிற்றலால் அவர் சமயம் புறப் புறச் சமயம் என்று வைத்தெண்ணப்படும்.

தார்க்கிகர் முதல் பாஞ்சராத்திரி ஈறாகிய அறுவரும் வேதம் பிரமாணம் எனப் பொது வகையாற் கொள்ளினும் அவருள் தார்க்கிகர் பிரமாணியங் கொள்ளாமையாலும் வேதப் பொருளோடு முரணிப் பொருள் கொள்ளலாலும், மீமாஞ்சகர் கருமகாண்டத்திற்கே பிரமாணங் கொண்டு ஞானகாண்டமாகிய உபநிடதத்தை இகழ்தலாலும். ஏகான்மவாதிகள் ஞானகாண்டத்திற்கே பிரமாணங் கொண்டு கருமகாண்டத்தை இகழ்தலானும், ஏனைய மூவரும் வேதவாக்கியங்களுள் தத்தம் மதத்திற்குப் பொருந்துவனவற்றையே எடுத்துக் கொண்டு ஏனையவற்றிற்குப் பிரமாணங் கொள்ளாமையாலும், வேதப்புறமாகிய நூல்களைப் பிரமாணமாகக் கொள்ளலாலும் இவ்வறுவரும் சிவாகம நிந்தகராகலானும் இவர் சமயம் புறச்சமயம் எனப்பட்டது.

## உலகாயதம்

காண்டலளவை ஒன்றே பிரமாணம். காணப்படும் நிலம், நீர் தீ, வளி என நான்கே தத்துவங்கள். இவை நித்தப்பொருள்கள். இவற்றின் கூட்டமே உடம்பு. பாகடையும் சுண்ணாம்பும் கூடியவழிச் செவ்வண்ணம் பிறக்குமாறுபோல இவற்றின் கூட்டரவால் ஓர் உணர்வு உண்டாம். அவ்வுணர்வு உடம்பு வளரவளரும் தேயத்தேயு மாகலின் உடம்பிற்கு வேறே உயிர் என்பது பொய். உடம்பிற்கு இன்பதுன்பங்கள் இயல்பாயுள்ளன. இவற்றிற்கு வினை காரணம் என்பது பொய். மயிலைச் சித்திரித்தாரையும், குயிலைக் கூவுவித்தாரையும், காணாமையால் கடவுள் உண்டென்பதும் பொய். இம்மையில் மகளிரோடு மணந்து, உண்டு உடுத்து வாழ்வதே துறக்கவின்பம். அது பெறாது பகைவரால், நோயால் வறுமையால், நூல்களால், பிறவற்றால் வருந்துவதே நரகம். வேறு துறக்கம், நரகம் என்பது பொய். நான்கு பூதக் கூட்டரவில் பிராணவாயு ஒன்று நீங்கில், உணர்விழந்து உடம்பு நாசமாகும். அதுவே விடுபேறு வேறு உண்டென்பது பொய். இவ்வுண்மையுணராது மறுமையுண்டெனக் கொண்டு தவம், விரதம் ஒழுக்கம், தானம் புண்ணியச் செயல்கள் செய்தல் ஆகியவற்றைக் கைவிட்டு உழவு, பசுக்காவல் வாணிகம், செங்கோல் முறைமை முதலியனவாக ஆன்றோர் காட்டிய நெறியில் நின்று இம்மை இன்பங்கள் நுகர்ந்து வாழ்தல் உறுதிப் பயன் என்பதாம். இவர்க்குரியநூல் செய்தவன் பிரகஸ்பதி எனும் தேவகுரு.

## பௌத்தம்

உலகத்துப் பிறந்து, இறந்து, உழன்று சீலம் முதலியவற்றால் நல்லுணர்வு தோன்றி முழுதுணர்ந்து முத்தி பெற்றுத் தன்னைப் போல் பிறரும் உணர்ந்து உய்தற்பொருட்டுக் கருணையினால் பிடக நூல் செய்தவன் புத்தக் கடவுள். அந்நூலில் கூறப்படும் பொருள்கள் ஞானமே ஆன்மா. அது நீரோட்டம்போலத் தொடர்ச்சியாய்க் கணந்தோறும் தோன்றி அழியும். அவ்வாறு தோன்றி அழியும்போது மான்மத நாற்றம்போல் முற்கணத்தில் தோன்றியழியும் ஞானத்தில் தோன்றிய வாசனை பிற்கணத்தில் தோன்றும் ஞானத்தில் பற்றுதலால் அறிவு முதலாயின நிகழும். மற்றும் உள்பொருள் போல் தோன்றுவனவெல்லாம் கணந்தோறும் தோன்றியழியும். இந்த ஞானத்தில் தோன்றிய வாசனை அழிவதேமுத்தி. ஞானமும் கெடுதலே முத்தி என்பாருமுளர். கொள்கைநுட்ப வேறுபாட்டால் பௌத்தருள் நால்வகையுளர்.

ஆருகதம்:

சிவனும், அசிவனும், ஆச்சிரவமும், சமுவரமும், நிர்ச்சரமும், பந்தமும், விடும் எனப் பதார்த்தங்கள் ஏழு உள. இவற்றுள் சிவன் அநாதி சித்தன், முத்தன், பெத்தன் என மூவகைப்படும். அநாதி சித்தன் அருகக் கடவுள். முத்தன் மோகம் முதலிய எண்குணங்களின்றும் நீங்கியவன். பெத்தன் மேற் சொன்னவற்றுள் கட்டுண்டவன். இச் சிவன் எடுத்த உடம்பினளவாய் வியாபகமாய் உடம்பின் தோறும் வெவ்வேறாம்.

அசிவன் – புற்கலம், ஆகாயம், தன்மம், அதன்மம் என நால்வகை

ஆச்சிரவம் – பொறிவழிச் சேறல், கன்மத் தொடர்ச்சி எனவும்படும்

சமுவரம் – அங்ஙனம் செல்லாது தடுத்து முத்திக்குக் காரணமாவது

நிர்ச்சரம் – சுடுபாறையிற் கிடத்தல், தலைமயிர் பறித்தல் முதலியதவம்

பந்தம் – சிவனுடைய சுதந்திரத்தையடக்கிப் பிறவியிற் சுழல் விக்கும் மோகம் முதலிய எண்குணங்கள்

விடு – சிவன் மோகம் முதலியவற்றின் நீங்கி சுதந்திரம் பெற்று உலகங் கடந்து எல்லையின்றியுளதாகிய ஆகாயத்தின் மேனோக்கிய சேறல்.

ஆருகத நூல் செய்தவன் அருகன்

இவ்வறுவகைப் புறப்புறச் சமயத்தவருள் உலகாயதன் காட்சிவாதி எனவும், பௌத்தன் கணபங்கவாதி, சூனியவாதி, விஞ்ஞானவாதி, சமுதாயவாதி எனவும், ஆருகதன் அநேகாந்தவாதி எனவும் அழைக்கப்படுவர்.

புறச் சமயங்கள் ஆறனுள் தருக்கம் – வைசேடிகம், நையாகிகம் என இருவகைப்படும்.

வைசேடிகம்:

இந்நூலில் கூறப்படும் பொருள்கள் திரவியம், குணம், தொழில் சாதி, விசேடம் சமவாயம், இன்மை என எழுவகையாகும்.

இவ்வெழுவகைப் பொருள்களின் சிறப்பியல்பு, பொது இயல்பு, வேற்றியல்புகளை உணரவே உடம்பு முதலியவற்றின் வேறாகிய ஆன்

மாவின் இயல்பு விளங்கும். அதனால் உடம்பு முதலியவற்றை நான் என்று எண்ணிய மித்தை உணர்வு நீங்கும். அதனால் முயற்சி இன்மையின், அறம் பாவம் இன்மையின், பிறவி ஒழியும். அதனால் துன்ப இன்பங்கள் இலவாய், உடம்பு எடுத்துக் கொண்ட வினைப்பயன் நுகர்ச்சியால் கழிந்தபோது இறுதித்துன்பங்கெட்டு, மனத்தோடு கூடு தற்கு ஏது இன்மையின் அறிவின்றிப் பாடாணம் போறகிடப்பதே முத்தி வைசேடிகநூல் செய்தவர் கணாதமுனிவர்.

## நையாயிகம்

இந்நூலினைச் செய்தவர் அக்கபாதமுனிவர். இந்நூல் பதார்த்த இலக்கணமும், முத்தி இலக்கணமும் வைசேடிக நூலினைப் போலவே கூறி பிரமாணம் முதலிய பதார்த்தங்கள் பதினாலு என்றும் ஈசுரன் செய்விப்பவன் என்றும் கூறும்.

## மீமாஞ்சை

வேதத்தில் கருமகாண்ட ஆராய்ச்சி செய்வதற்கு எழுந்த நூலாகும். அதுவும் வேதம் எனப்படும். இதனைப் பன்னிரண்டு அத்தியாயமாகச் செய்தவர் சைமினி முனிவர். இதில் கூறப்படும் முக்கிய கருத்தாவது வேதம் அநாதியே சுயம்புவாயுள்ளது. அதனால் அது பிரமாணம் எனப்படும். வேதம் விதியும் புனைந்துரையும், மந்திரமும், குறியீடும் என நான்கு வகைப்படும். இவற்றுள் விதி அங்கியும் ஏனையவை மூன்றும் விதிக்கு அங்கமுமாகும்.

ஆன்மாக்கள் பலவாய், நித்தமாய், வியாபகமாய்ப் பிறந்திறந்து வினைகளைச் செய்து வினைப்பயன்களை நுகர்ந்துவரும். வினை செய்தவருக்கு வினையே சுவர்க்கம் முதலிய பயன்களை உதவும். காமியப் பயன்களைக் குறித்து வினை செய்யின் அவ்வினை வினைப் பயனை உதவும். காமியம் வேண்டாது விலக்கியன ஒழித்து வேள்வி செய்யின் அவ்வினை முத்தியை உதவும்.

இவ் வான்மாக்களுக்கு வேறாய்ப் பரமான்மா ஒருவன் உண்டு என்பதும், உலகம் தோன்றி அழியும் என்பதும் பொய். உலகம் என்றும் இவ்வாறே நிலைபெறும்.

சைமினி சூத்திரங்களுக்குப் பாடியம் செய்தவர் சபர முனிவன் சூத்திரங்களுக்கும் பாடியங்களுக்கும் சிறிது வேறுபாடு கொண்டு பட்டாச்சாரியன் சூத்திரமதம்பற்றி வழிநூல் செய்தான். இதனால் மீமாஞ்சகமமும் இருவகைப்பட்டது.

## ஏகான்ம வாதம்

மாயாவாதமும், பாற்கரியவாதமும், கிரீடாப்பிரமவாதமும், சத்தப்பிரமவாதமும் என்று நால்வகைப்படும். சச்சிதானந்தமாய், நித்தமாய், வியாபகமாய் நிற்பது பிரமம். இப்பிரமமொன்றே மெய்ப் பொருள் ஏனைய எல்லாம் பிரமத்தின் விவர்த்தனமாய் இப்பியில் வெள்ளிபோல் அவிச்சையினால் காணப்படுவன வாகலிற் பொய். இவ்வாறு தோன்றும் உலகிற்கு முதற் காரணமாகிய மாயை பிரமம் போல் சத்துமன்றி முயற்கோடு போல் அசத்துமன்றி அநிருவசன மாய் இருக்கும். இந்த மாயைக்கு வேறாய் இருக்கும் பிரமரூபமே யான் எனவேதாந்த ஞானத்தால் அறிவதே முத்தி. இது மாயாவா தியின் கொள்கை. பிரமமே சடமும் சித்துமாகிய உலகங்களாய்ப் பரிணமித்து அங்ஙனம் பரிணமித்து விகாரப்பட்டமையை அறியாமை யினாற் பந்தமாயிற்று. பரமார்த்தத்தில் ஒருபொருளே. வேதாந்த ஞானத்தால் உடம்பிற்கு வேறாகிய ஆன்ம ரூபம் விளங்கும். அதுவே பரப்பிரமம் என அறிந்து அதன் கண் இலயித்தலே முத்தி. இது பாற்கரியன் கொள்கை.

முற்கூறப்பட்ட பிரமமே யான், யான் ஒரு படித்தன்று. பல வேறு வகைப்பட்ட விகாரப் பொருள்களோடு கூடிப் பலவாற்றான் விளையாடுகின்றேன். என்று இவ்வாறறிவதே முத்தி. இது கிரீடப்பிரமவாதி கொள்கை

காரணமாகிய பரப்பிரமம் இறுதிக்காலத்தில் சத்த வடிவிற்றாய் இருக்கும். அது அவிச்சையினால் சித்தம் சடமுமாய் உலகங்களாய் விரியும். முடிவின்கண் சத்தமாத்திரையே உள்ளது என்று இவ்வாறு அறிவதே முத்தி இது சத்தப் பிரமவாதி கொள்கை. ஏகான்ம வாதநூல் செய்தவர் வியாசமுனிவர்.

## சாங்கியம்

பிரகிருதிநித்தமாய் வியாபகமாய், சடமாய், எல்லாப் பொருள் களுக்கும் காரணமாய் முக்குணங்களுக்கும் சமமாய்நின்ற அவதாரமாய் அருவாயுள்ளது. பிரகிருதி இருபத்து நாலாந் தத்துவம். பிரகிருதி யில் இருந்து தோன்றும் காரியம் புத்திமுதல் பிருதுவி ஈறாகிய இருபத்து மூன்று தத்துவங்கள். இருபத்து நான்கு தத்துவங்களுக்கும் வேறாய் நித்தமாய், அருவாய், நானாபேதமாய், முற்றுணர்வும் தொழிலுமின்றி அறிவுமாத்திரமாய் இருக்கும் ஆன்மா இருபத்தைந் தாந் தத்துவம். இப்புருடன் முத்தியிலும் பெத்தத்திலும் வேற்று மையின்றி ஒரு தன்மையனே. அவிச்சையாற் பெத்தனெனைப்பட்டு

இன்ப துன்ப உணர்வு தோன்றும். பிரகிருதியையும் புருடனையும் பகுத்துணர அவிச்சை நீங்கும். அதுவே முத்தி. ஆன்மாக்களுக்கு வேறாய் இறைவன் உண்டென்பது பொய். இந்நூல் செய்தவன் கபில முனி. பாஞ்சாரத்திரத்தில் இருபத்தைந்தாவது தத்துவமாக வாசுதேவன் என்பவன் உளன். அவனே பரம்பொருள். அப்பரம் பொருளில் இருந்து பிருட்டினன், அநிருத்தன், மகரத்துவசன், இரௌகினேயன் என்னும் நால்வர் தோன்றினர். இவர்களால் சடமும் சித்துமாகிய உலகங்களும் படைக்கப்பட்டன. எனவே எல்லாம் வாசுதேவனின் பரிணாமமே' வேதங்களில் உறுதிப் பயன் இல்லை. பாஞ்சராத்திரத்தில் உறுதிப் பயன் உண்டு. ஆதலால் பாஞ்சராத்திர முறைப்படி தீட்சை செய்து கொண்டு வாசுதேவனை வழிபட்டு வாசுதேவனில் இலயித்தலே முத்தி எனக் கூறப்படுகிறது. இந்நூல் செய்தோன் வாசுதேவன்.

# 5

## *சித்தியார் சுபக்கம்*

சிவஞானசித்தியார் கூறத்தொடங்கிய ஆசிரியர் பாயிரத்தில் விநாயக வணக்கம், பரசிவவணக்கம், நூலின் வழி, நுதலியபொருள், கேட்போர்பயன், அவையடக்கம் என ஆறு பாடல்களை அருளியுள்ளார்.

மங்கல வாழ்த்தில் சிவபெருமானை வணக்கம் கூறும்முகத்தால் சிவஞான போதத்தின் பன்னிரண்டு சூத்திரப் பொருளும் உய்த்துணரக் கூறப்பட்டுள்ளது.

முன்னூற் சிறப்புக் கூறும் பாடலின் மூலம் குருவணக்கமும் சிவஞானபோதத்தின் வழிநூலாகச் சைவசித்தாந்தத் திறத்தினைக் கூறும் நூலாகவும் குறிப்பிடப்படுகின்றது.

சொல்லப்படும் பொருள் கூடும்முறைமையும், கேட்கத்தக்கவர் கதிப்பாற்செல்ல விழையும் வைநாயிகர் எனவும் நூலைக்கேட்பதன்பயன் திருவடிப்பேறு என்பதையும் கூறியுள்ளார்.

அவையடக்கப் பாடலினால் இறைவன் அறியமுடியாதவனாய் இருப்பினும் அருளினால் அறிந்து கூடலாம் என்பதும் குறிப்பிடப்படுகின்றது.

சைசித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மை அளவைமூலம் நிட்சயிக்கப்படக் கூடியன என்பதால் அளவைகள் இவை என முதற்கண் அளவை இலக்கணத்துடன் தொடங்குகின்றது நூல்.

அளவை எனினும் பிரமாணம் எனினும் ஒக்கும். அதாவது பொருள்களை அளக்கும் கருவியாகும்.

பொருள்காணப்படும் உலப்கபொருள் காணப்படாத பதி, பசு, பாசப்பொருளும் எனஇருவகைப்படும். அவற்றுள் காணப்படும் பொருள் எண்ணல், நிறுத்தல், நீட்டல், முகத்தல் என்னும் நான்கு கருவிகளால் அளக்கலாம். காணப்படாத பதி, பசு, பாசப்பொருள்களை அக்கருவிகளால் அளக்கமுடியாது. அதனை ஆகமம் அனுமானம் என்னும் கருவியைக கொண்டு ஆன்மசிற்சத்தியால் அளக்கல் கூடும். அதனால் அவ்வகை அளவைகளின் இலக்கணத்தை முதற்கண் கூறுகின்றார்.

ஆன்மசிற்சத்தியே பிரமாணம் என்பதும் கருவிகளும் உபகாரத்தால் பிரமாணம் எனப்படும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

பிரமாணங்கள் பலவகை ஆயின் அவை காண்டல் கருதல், உரை என்னும் மூவகையுள் அடங்கும் இவற்றை விரித்து பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம், இன்மை, அருத்தாபத்தி, உவமை, பாரிசேடம், சம்பவம், உலகவாதம், சகசம் எனும் பத்துவகை அளவையாகவும் கூறுவர். இவையாவற்றையும் முற்கூறி மூன்றினுள் அடக்குவர்.

காண்டல் எனும் அளவை ஐம்பொறிவாயிலாக விடயங்களை நேரே அறிவது. இது (1) வாயிற்காட்சி (2) மானதக்காட்சி (3) தன்வேதனைக்காட்சி (4) யோகக்காட்சி என வகைப்படுத்தப்படும். கருதல் என்பது புகையானது தீயை விட்டு நீங்காது இருப்பது போல யாண்டும் பொருளை விட்டு நீங்காதிருக்குங் காரணகாரியங்களைக் கொண்டு காணப்படாது மறைவாக இருக்கும் பொருளை அறிதல் இது (1) தன்பொருட்டுக்கருதல் (2) பிறர்பொருட்டுக் கருதல் என இருவகைப்படும்.

காண்டல், கருதல்களால் அறிய முடியாத பொருளை அறிவிப்பது உரை அளவை இது (1) மந்திரக்கலை (2) தந்திரக்கலை (3) உபதேசக்கலை என மூவகைப்படும்.

இவற்றின் விரிவுகள் எல்லாம் அளவை இயலில் கூறப்பட்டுள்ளன.

## சுபக்க அமைப்பு

சிவஞானசித்தியார் சுபக்கப்பகுதி முந்நூற்று இருபத்தெட்டுத் திரு விருத்தங்களையுடையது. முதனூலாகிய சிவஞானபோதம் போலவே பன்னிரண்டு கூறுகளையுடையது. பொது உண்மை என அதிகாரம் இரண்டினைக் கொண்டது. பிரமாணம், இலக்கணம், சாதனம் பயன் என நான்கு இயல் உடையது. ஒவ்வொரு இயலும் மும்மூன்று பாக மாக வகுக்கப்பட்டுள்ளது. கூறப்படும் உண்மைகள் யாவும் தடை விடைகளால் நிறுவப்பட்டுள்ளது.

பிரமாண இயலில் முதலில் கூறப்படுவது பதிஉண்மை. மூவகை அளவைகளுள்ளும் கருதல் அளவையினால் இது நிறுவப்படுகின்றது. ''ஒருவனோடொருத்தி யென்றுரைத்திடும் உலகமெல்லாம் வரு முறை வந்து நின்று போவது ஆதலாலே தருபவன் ஒருவன் வேண்டும்'' என்று கூறி அதனை மூன்று கூறுகளால் விளக்கியுள்ளார்.

இரண்டாம் சூத்திரம் பாச உண்மையைக் கூறுகின்றது. உலகம் தோன்றுவதற்கு மூலகாரணம் மாயை. துணைக்காரணம் சிற்சத்தி வழித்தாய துணைக்காரணமாய கன்மம், பாசம், நிமித்த காரணம் இறைவன் எனக் கூறுகின்றது இச் சூத்திரம். இதற்கு குடம் எனும் பொருள் தோன்ற மண் முதற் காரணம் திகிரி துணைக்காரணம். குய வன் நிமித்தகாரணம் ஆக இருப்பதை உதாரணமாகக் கூறி விளக் கப்பட்டுள்ளது. இச் சூத்திரம் நான்கு கூறுகளை உடையது.

இப்பகுதியிலே இறைவன் உயிர்களோடு அத்துவிதமாய் நின்று கன்மத்துக் கேற்ப மாயையினின்றும் பிரபஞ்சத்தைத் தோற்றுவிப்பான் என்பது நன்கு தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

பொய் கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண் டார் விளக்கம் இதில் விரிவாக உள்ளது.

மெய்கண்டதேவர் ''அத்துவிதம்'' என்ற சொல்லுக்கு இன்மைப் பொருள் காணாது அன்மைப் பொருளையே கண்டார். அ + துவிதம் எனப்படுவதில் துவிதம் = அல்லாதது என்றே பொருள் கொள்ளப் படுகின்றது.

இறைவனின் அத்துவித நிலையை திருஞானசம்பந்தப் பெருமான் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''ஈறாய் முதலொன்றாயிரு பெண்ணாண் குணமூன்றாய்
மாறா மறைநான்காய் வருபூதமவையைந் தாய்
ஆறார்சுவையே ழோசையோ டெட்டுத் திசைதானாய்
வேறாயுடனா னானிடம் திருவீழிம்மிழலையே.

இறைவன் ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்கும் நிலையே அத்துவிதம்.

உயிர்கள் நிலைத்தற்கு இறைவன் ஒன்றாய் நிற்கின்றான். பொருள்களை உயிர்கள் அறியும்படி அறிவித்தற்கு இறைவன் வேறாய் நிற்கின்றான். அறியினும் அறிந்தவாறே அனுபவித்தற்குச் சுதந்திரமின்மையின் அனுபவிக்கும் வண்ணம் செலுத்துவதற்கு இறைவன் உடனாய் நிற்கின்றான். இறைவன் ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்பதன் காரணமாக உயிர் முறையே நிலைத்தல், அறிதல், அனுபவித்தல் எனும் பயன்களை அடைகின்றது.

இறைவன் ஒன்றாய் இருப்பதற்கு உவமானமாக பண் – இசை, வெம்பரிதி – மதி, திலம் – தைலம், கூறப்படும்.

பண் – இசை, என்பதனால் சிவன் – சீவன் பேதம் கூறுப்படுகின்றது.

''யானெனுந் தன்மை நினையின்றி இல்லாத் தன்மையால் வேறலேன்'' என்பார் தாயுமானவர்.

சூரிய ஒளியின்றிச் சந்திர ஒளி இல்லை. ஆயினும் பொருள் வேறு அதுபோல் சிவன், சீவன்வேறு.

திலம் – தைலம் வேறுவேறு பிரித்தறிய முடியாததுபோல் சிவன் சீவன் சாதாரணமாகப் பிரித்தறிய முடியாது.

இறைவன் வேறாய் நிற்பதற்கு உவமானமாக தீ – இரும்பு பாணி – உப்பு, விண் – அநிலம் கூறப்படும்.

இறைவன் உடனாய் நிற்கும் நிலைக்கு உடல் – உயிர், நீர் – நிழல் உச்சி – பளிங்கு, பகல் – விளக்கு, பால் – நீர், கண் – இரவி, உணர்வு – ஒளி என்பன உவமானமாகக் கூறப்படும்.

இவ்வுவமான உவமேயங்களின் உண்மைத் தாற்பரியங்களை விளங்கிக் கொண்டால் இறைவனின் அத்துவித நிலையும் நன்கு விளங்கும்

மூன்றாம் சூத்திரம் பசு உண்மையைக் கூறுகின்றது. ''உயிரெனப்படுவது இந்த உடலின் வேறுளதாய்,' என்று சூத்திரம் விளக்கமுற்படுகின்றது.

குடத்தைக் குயவன் செய்தலினாலேயே கொள்வோன் உண்டென்று கருதப்படுதல்போல பிரபஞ்சத்தை இறைவன் தோற்றுவித்தலினாலேயே அப்பிரபஞ்சத்தில் பற்று வைத்து நிற்கும் உயிர் உண்டு என்

பது இதில் கூறப்படவேண்டுவதாயினும் ''அலகிலா உயிர் என்றதனால் உயிர் யாது? எங்கிருக்கும் என்பதற்கு இச் சூத்திரம் பதிலளிக்கின்றது.

சீதம் இன்மையால் பனி இன்மை காணப்படுதல்போல உடல் இயக்கமின்மையால் உயிர் இன்மை காணப்படும். இவ்வெதிர்மறை கொண்டு உடன்பாட்டு முகத்தால் உடல் இயக்கம் உண்மையால் உயிர் உண்டு என்று நிறுவுகின்ற அனுபவத்தில ஏது என்னும் அனுமானப் பிரமாணம் இங்கு எடுத்காளப் படுகின்றது.

சூனியம், தூல உடம்பு, ஐம்பொறி, சூக்கும உடம்பு, பிராணவாயு, பிரமம், சமுதாயம் எனும் ஏழும் உயிரல்ல என்றும் இவற்றின் வேறாய் காணப்படும் உடலின்கண் உயிர் உண்டு என இங்கு நிறுவப்படுகின்றது.

இலக்கணவியல் பசு இலக்கணம், பாச இலக்கணம், பதியிலக்கணம் என்பவற்றைப் பேசுகின்றது. முதலாம் இயலில் இறுதியாகச் சொல்லப்பட்ட பசு உண்மைக்குப்பின் பசு 'இலக்கணம் முதல்மூன்று அதிகரணத்தாலும் ஈவ்வியலில் விரிவாக விளக்கப்படுகின்றது.

அந்தக்கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவை ஆன்மா அன்று எனவும் ஆணவமலத்தின் சேர்க்கையால் ஆன்மா அந்தக்கரணங்களைக் கூடி நனவு, கனவு, சுழுத்தி, துரியம், துரியாதிதம் என்னும் ஐந்து அவத்தைதகளைப்படும் என்று இங்கு விளக்கப்படுகின்றது. இதல் மூன்று கூறுகள் உள.

பாச இலக்கணத்திலே ஆணவம், கன்மம், மாயை, மாயாகாரியம் திரோதாயி என்று ஐந்து வகையாகப் பாசம் கூறப்படுகின்றது. திரோதாயினாலேயே ஏனைய நான்கும் காரியப்படுகின்றமையால் இவ்வைந்தாம் சூத்திரத்தில் திரோதான சத்தியின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

திரோதானசத்தி என்பது உயிருள் மறைந்து நின்று கன்மத்துக்கேற்ப அறிவிக்கும் சிவசக்தி. பந்தம் உறுத்தலால் இச்சத்தி பாசம் எனப்படும பந்த நீக்சத்தில் இதுவே அருள் சத்தியாகும்.

இத்திரோதானசத்தி வயப்பட்டு நிற்கும் ஆன்மா தன்னைச் செலுத்தி உடனாய் நிற்கும் முதல்வனை அறியமாட்டாது. இதில் இரண்டு கூறுகள் உள,

இலக்கண இயலின் இறுதியில் பதியிலக்கணம் பேசப்படுகின்றது. ''அறிவுறும் பொருளோவீசன் அறிவுறாதவனோ? என்று சூத்திரம் தொடங்கிகுன்றது.

சிவம் அறியப்படும் பொருளாகவும், அறியப்படாத பொருளா யும் இன்றிசித்துச்சத்தாய் நிற்கும். பதியைப் பாசம் அறியாது பாசத் தை பதி அறியாது. என்று இதில் விளக்கப்படுகின்றது. இதில் மூன்று கூறுகள் உள.

இலக்கண வியலுடன் பொது அதிகாரம் ஆறு சூத்திரங்களுடன் முடிகின்றது.

பின்னர் சிறப்பதிகாரம் எனும் உண்மையதிகாரம் ஏழாம் சூத்திர மாகிய சாதனவியலுடன் தொடங்குகின்றது.

முப்பொருள்களும் சத்தென்னின் ஒன்றையொன்று அறிந்திடுமா? பாசத்தைப் பதியறியாது பதியைப் பாசம் அறியாது பதி, பாசம் என்பவற்றைப் பசுவே அறிகின்றது

முப்பொருள்களுள் பதியை அறிதற்கும், அதனை அடைதற்கும் உரிமையுடையது எதுவெனவும், அடைதற்குச் செய்ய வேண்டியது எதுவெனவும் செய்யும் முறை எவ்வாறு எனவும் சந்தேகிப்பார்க்கு அந்நிகழ்வுகள் பற்றி இவ்வியல் விளக்குகின்றது.

ஆறாஞ்சூத்திரத்தில் பதி பாசத்தை அறியாது பாசத்தைப் பசு அறியாது என்று கூறியமையால் அவ்விரண்டினையும் அறிதற்கு உரி யது பசு என இவ்வேழாஞ் சூத்திரம் கூறுகின்றது.

பதி, பாசம் இரண்டினையும் ஆன்மா அறியுமென்றும் அவ்விரண் டினையும் அறியும் தன்மையால் ஆன்மா தன்னை அறியும் என்ற உண்மை இதில் பேசப்படுகின்றது.

பதி, பசு, பாசம் ஓரிடத்திருப்பினும் பாசம் பசுவினைப் பற்றும், பதியைப்பற்றாது என்பது உதாரண முகத்தால் நன்கு விளக்கஞ் செய்யப்படுகின்றது.

பதி சூக்கும சித்தாகவுள்ளது. பசு தூலசித்தாகவுள்ளது. பதி பற்றுந்தன்மையில்லாதது பசு பற்றுந்தன்மையுடையது.

பதி, பசு, பாசம் என்பவற்றின் வியாபகத்தன்மைக்கு சூரிய ஒளி போன்ற பரிபூரண வியாபகமும், கண்ணொளி போன்று ஏகதேசவி யாபகமும், இருள் போன்று சமவியாபகமும் பேசப்பட்டுள்ளது. இவ் வியல் மூன்று கூறுகள் உடையது.

எட்டாஞ் சூத்திரத்துள் உயிர் பதிப்பொருளை அடைவது எவ் வாறு என்பது நன்கு உதாரண முகத்தால் விளங்கப்படுத்தப்படு கின்றது.

பதியை அடைதற்குரிய உரிமை தனக்கே உண்டென்பதை உணர்ந்த உயிர்க்கு பதியை அடைதலாகிய அப்பேறு தனக்கு வேண்டும் என்பதையும், அப்பேறு அடைவதற்குச் சிறந்த சாதனம் இது என்பதையும் அச்சாதனம் எவ்வாறு வருமென்பதையும் அறிந்தாலன்றி அப்பதிய்யை அடைதற்குரிய மனஎழுச்சி கூடாது.

ஆதலால் உயிருக்கு மனஎழுச்சி உண்டாகும் பொருட்டு பதியை அடையவேண்டுவது அவசியம் என்றும் அதற்குச் சிறந்த சாதனம் இதுவென்றும், அது ஞானசற்குருவால் வரும் என்றும் இச் சூத்திரம் விளக்குகின்றது.

இவ்வெட்டாஞ் சூத்திரம் நான்கு கூறுகளையுடையது. இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் எய்திய உயிர்களுக்கு இறைவன் குருவாக வந்து உணர்த்துவன். மும்மலங்களையுடைய சகலர்க்கு மானிடச்சட்டை தாங்கி எழுந்தருளிவந்து தீட்சையால் ஞானத்தை அருளுவன். இருமலமுடைய பிரளயாகலருக்கு மான்மறி மழுவுடன் கூடிய அருள்திருமேனி கொண்டும், ஆணவமல்மொன்றுடைய விஞ்ஞானாகலருக்கு அவர்தம் அறிவிலேயே அறிவாக நின்றும் ஞானத்தை உணர்த்துவன்.

இவ்வியலின் முதலாம் அதிகரணத்தில் தீட்சையின் வகைகள் இவை என்பது விரிவாகக் கூறப்படுகின்றது. சாதாரதீட்சை நிராதாரதீட்சை என்னும் பிரிவும், சாதாரதீட்சையின் வகைகளும் கூறப்பட்டுள்ளது.

இரண்டாம் அதிகரணத்தால் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங்களும் பேசப்பட்டுள்ளன. ஒவ்வொன்றினதும் விரிவும் ஒன்றினொன்று சோபான முறையால் மேற்செல்லும் தன்மையும் உயர்வும் விளக்கஞ் செய்யப்படுகின்றது. மேன் நிலையாகிய ஞானம் கேட்டல், சிந்தித்தல் தெளிதல், நிட்டை கூடல் என்னும் படிகளையுடையதாய் இருக்கும் நிலை விளங்கப்படுத்தப்பட்டுள்ளது.

நிட்டைகைவரப் பெற்ற ஞானிகளுக்கே ''எங்கெழிலென் ஞாயிறு எமக்கு?'' என்ற அனுபவ உணர்வு உண்டாகும்.

ஒன்பதாஞ் சூத்திரம் பாசஞானம், பசுஞானம் என்பன பற்றியும் திருவைந்தெழுத்துப் பற்றியும் பேசுகின்றது. பதிப்பொருளை அடைவதே பேறு அப்பேற்றுக்குச் சிறந்த சாதனம் ஞானம். அது ஞான குருவினால் உண்டாகும் என்று உணர்ந்த பின்னர் ஞானத்தை அனுட்டிக்கும் முறை எவ்வாறு என்பதற்கு இச்சூத்திரம் விடைதருகின்றது.

வேத உபநிடதங்கள், ஏனைய நூல்களால் பெறப்படும் பசுஞா னத்தாலோ தற்போதமாகிய பசுஞானத்தாலோ சிவனை அடைதல் முடியாது. பதி ஞானமாகிய திருவருள் ஒன்றினாலேயே சிவனை அடையலாம். அத் திருவருளாகிய பதி ஞானத்தில் நிலை பெறவொட் டாது செய்யும் வாசனா மலம் தாக்காது இருக்க திருவைந்தெழுத் தெண்ணுதல் உபாயம் என விளக்கப்படுகின்றது. ''வேதக் காட்சிக் கும் உபநிடதத்துச்சியில் விளைந்த போதக் காட்சிக்கும் காணலன்'' என்ற கந்தபுராணக் கருத்தும் இவ்விடத்துச் சிந்திக்கத்தக்கது.

சிறப்பதிகாரத்தின் இரண்டாம் பகுதியாகிய பயனியல் மூன்று சூத்திரங்களையுடையது. முதற்கண் கூறப்பட்ட சாதனத்தால் ஏற் படும் பயன் பாச நீக்கமும் சிவப்பேறும் ஆகும்.

சாதனங்களினால் பயன்பெற்றார் தன்மை ஏகனாகி நிற்றலும், இறைபணி நிற்றலும் ஆகும். பெத்த நிலையில் பாசங்களோடு எவ் வாறு அவையே தானாய் நின்றதுவோ அவ்வாறே சுத்த நிலையில் அவனே தானாய் ஆகிய அந்நிலையை யுணர்ந்து ஏகனாகி நிற்க வேண்டும்.

தான் பணிநீத்தல் அடுத்த நிலை ஆகும். இவ்விரு வகை நிலை யினாலும் மும்மலங்கள் நீங்கும். இவ்வாறு நிற்பவர்க்கு இதம் - அகி தம், விருப்பு - வெறுப்பு, நன்மை - தீமை, செயல் - செயலின்மை என ஒன்றுமே இல்லை, எல்லாம் அவன் செயலாகும்.

இக்கருத்துக்கள் யாவும் பத்தாம் சூத்திரத்தில் பேசப்படுகின்றன.

ஏகனாகி நிற்றல், இறைபணி நிற்றல் என்னும் இரண்டினாலும் பாச நீக்கம் எய்திய ஆன்மாவுக்கு நிகழும் சிவானுபவத்தில் அனுபவிக் கின்ற ஆன்மா, அனுபவம், அனுபவிக்கப்படும் பொருள் ஆகிய மூன் றும் உண்டோ இல்லையோ என்பார்க்கு விடை பதினொராஞ் சூத் திரத்துள் பேசப்படுகின்றது.

காயம் ஒழிந்தாற் சுத்தியாகும். ''மயாமல மெல்லாம் நீங்கி மலரடிக்கீழ் இருப்பன் மாறாத சிவானுபவம் மருவிக் கொண்டே'' எனப் பேசப்படுகின்றது.

சிவானுபவம் உடைய முத்தர்க்குச் சிவமே அன்றிப் பிறபொருள் ஒன்றும் தோன்றாது.

திவ்விய தேகத்தோடு இருத்தலே முத்தி என்பாரை மறுத்துச் சிவானுபவம் உடையார்க்கு மாயாமலம் பற்றறக் கழியும் எனக் காட்டப்பட்டுள்ளது.

சிவானுபவம் உடையார்க்கு ஆணவ மலமும் பற்றறக் கழியும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனை நல்ல உவமான மூலம் விளக்கியுள்ளார்.

ஆணவ மலம் கெடும் என்பதற்கு நெல் - உமி - தவிடு - அரிசி என்னும் உவமை முகத்தால் விளக்கி ஆணவம் முத்தி நிலையில் உள்ளார்க்குக் கெடினும் ஏனைய பெத்த நிலையில் உள்ளார்க்கு ஆணவம் இருத்தலில் ஆணவத்தின் உண்மைக்கு நித்தத்திற்குக் கேடில்லை என்பது நிறுவப்பட்டுள்ளது.

சிவானுபவம் பெற்றவர்க்கு அத்திருவடி இன்பம் எத்தகையதாக இருக்கும் என்பதற்கு அப்பர் பெருமான் திருவாக்கு சான்றாகும்.

கனியினும் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க் குழல் பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்தாளும் அரசினும்
இனியன் தன்னடைந்தார்க்கிடை மருதனே

சீவன் முத்தர் இயல்பு பன்னிரண்டாஞ் சூத்திரத்தில் பேசப்படுகின்றது. சீவன் முத்தர்கள் இறைவனின் செங்கமலத் தாளிணைகளைச் சேர ஒட்டாத திரிமலங்களையும் அறுத்திடுவர். ஈசனுடைய நேசர்களோடு செறிந்து இருப்பர். ஈசனுடைய நேசர்களின் திருவேடமும் ஆலயங்களும் அரன் எனவே தொழுது இறைஞ்சி ஆடிப்பாடி மகிழ்ந்து கொண்டேயிருப்பர்.

சீவன் முத்தர் சிவனடியாரிடத்தும், சிவவேடத்தினரிடத்தும் அன்புடையராகவும், சிவாலயத்தைச் சிவனெனவுங் கண்டு வழிபடுதல் வேண்டும்.

திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவன் என வழிபடினும், திருவேடத்தை வழிபடுதல் அவ் வேடம் உடையார் கருத்து சிவமாய் இருத்தல் பற்றி எனவும், சிவாலயத்தை வழிபடுவவர் கருத்து சிவமாயிருத்தல் பற்றி எனவும் அறிந்து கொள்ளவேண்டும்.

சிவஞானிகளுக்கு நால்வகை வழிபாடும் கூடும். ஏனைய நிலையிலுள்ளவர்களுக்குத் தம் நிலைக்கு மேற்பட்ட வழிபாடு கூடாது. ஞானியே யாவர்க்கும் குரு ஆவார். சிவாலயமும், சிவனடியாரும், அக்குருவின் வேறல்ல.

ஞானகுருவின் அருளின்றிச் சிவன்திருவடியை அடைதல் கூடாது.

திருவருட்பயனில் கூறியபடி கள்ளத்திறைவர் துயர் கருதிக்கருணை வெள்ளத்து அலைபவராகிய சிவன் முத்தர்களின் தன்மை இப்படித் தான் இருக்கும் என்பதைப் பின்வரும் தோத்திரங்கள் எமக்கு நன்கு விளக்குகின்றதைக் காணலாம்.

திருச்சிற்றம்பலம்

விண்டொழிந்தன நம்முடைவல்வினை
விரிகடல் வரு நஞ்சம்
உண்டிறைஞ்சு வானவர் தமைத் தாங்கிய
இறைவனை யுலகத்தில்
வண்டு வாழ்குழல் மங்கையோர் பங்கனை
வலம்சுழி யிடமாகக்
கொண்ட நாதன் மெய்த் தொழில் புரிதொண்டரோ
டினி திருந்தமையாலே

— சம்பந்தர்

நாமார்க்கும் குடியல்லோ நமனையஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கரன் நற்சங்க வெண்குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்ச் சேவடியிணையே குறுகினோமே.

— அப்பர்

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க் குமடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க் குமடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க் குமடியேன்
திருவாரூர்ப் பிறந்தார் களெல்லார்க் குமடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் குமடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க் குமடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க் குமடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

— சுந்தரர்

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும் பொழில்கள் பயந்துகாத் தழிக்குமற்றை
மூவர் கோனாய் நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோன் என்னையும் வந்தாண்டு கொண்டான்
யாமார்க்கும் குடியல்லோம் யாதுமஞ்சோம்
மேவினோ மவனடியா ரடியாரோடும்
மேன்மேலுங் குடைந்தாடியாடுவோமே.

— மாணிவாசகர்


இச் சிவஞானப் பேறு பேற்ற சிவஞானிகளும், இறைவனுடைய அருட்டிருமேனிகளும், சொருப சிவமும் ஆகிய எல்லாம் குரு மூர்த்தமே ஆகும். அதனால் ஞான குருவை வழிபட்டு வருதல் வேண்டும் அவ்வாறு வழிபடின் சிவபெருமான் இக்குருவினிடமாக நின்று பரிசித்தும் நினைத்தும், பார்த்தும், சிவமாக்கி, சிவஞான சித்தியாகிய சிவானந்தத்தில் திளைக்கும் பேற்றினை அருளுவன்.

சிவமான ஞானந் தெளியவொண் சித்தி
சிவமான ஞானந் தெளிவொண் முத்தி
சிவமான ஞானஞ் சிவபரத்தே யேகச்
சிவமான ஞானஞ் சிவானந்த நல்குமே.

— திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்

௨௨



## ஆசிரியர்

சைவ சித்தாந்தமணி மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் வேலணையில் பிறந்தார். இவர் குடும்பத்தினர் இயமம் நியமம் தவறாது அனுஷ்டிக்கும் சிவபூசாதுரந்தரர். இவரது பீட்டனார் ஆறுமுக நாவலர் பெருமானின் வழி நின்று சைவப்பணி செய்த கந்தப்பு உபாத்தியாயர் என்பது நினைக்கற்பாலது. இவர் கருவில் திருவுடையராக இருந்ததுடன் இவருக்கு நல்லாசிரியராக வாய்க்கப் பெற்றோர் பண்டிதை த. வேதநாயகியும் வித்துவான் P. சிவப்பிரகாசமும் ஆவார்.

சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் பரீட்சைகளில் தோற்றி முதன்மைச் சித்தியெய்தி, தங்கப் பதக்கங்களையும் பெற்றார்.

1968-ம் ஆண்டு காஞ்சி மெய்கண்டார் ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக பரமாசாரியரிடமும் ஞான தீட்சை பெற்று மெய்கண்ட சாத்திரங்களைக் கசடறக் கற்க வாய்ப்பு எட்டியது.

இவரின் நுண்ணிய அறிவின் பிரதிபலிப்பாகச் சிதம்பரத்தில் நடைபெற்ற சென்னைச் சைவ சித்தாந்த சமாஜ மாநாட்டிலும், சைவ இளைஞர் மாநாட்டிலும் பேருரைவழங்க அழைக்கப் பெற்றார்.

முப்பத்திரண்டு ஆண்டுகள் ஆசிரியராகவும், சிறப்புமிக்க முன்னோடிப் பாடசாலைகளின் அதிபராகவும் சேவையாற்றி இப்போது இவர் இணுவில் மத்திய கல்லூரி அதிபராக இருந்து சேவை செய்கின்றார்.

சே. பொ. கேதாரநாதன்